செங்கல்பட்டு மாவட்டம், பி.வி.களத்தூரில் நடைபெற்ற கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவ சிகிச்சை மற்றும் சுகாதார விழிப்புணர்வு முகாமினை கால்நடை பராமரிப்பு துறையின் சார்பாக அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பார்வையிட்டார். அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் ஜெயந்தி, உதவி இயக்குநர் சாந்தி, ஒன்றியச் செயலாளர் வி.தமிழ்மணி, ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் ஆர்.டி.அரசு, உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஆன்மிகத்துடன் சமுதாயத் தொண்டினை மேற்கொண்ட

மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார் மறைவு!

பொதுமக்கள் நீண்ட வரிசையில் நின்று இறுதி அஞ்சலி

சென்னை, அக். 20-

செங்கல்பட்டு மாவட்டம் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீட நிறுவனர் பங்காரு அடிகளார் நேற்று (அக்.19) காலமானார். அவருக்கு வயது 82.

உடல் நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிறிது காலமாக அவர் சிகிச்சை பெற்று வந்தார். இதனிடையே மாரடைப்பு காரணமாக நேற்று மாலை 5 மணியளவில் உயிரிழந்தார்.

ஆதிபராசக்தி தொண்டு நிறுவன மருத்துவக் கல்வி மற்றும் கலாச்சார அறக்கட்டளையின் தலைவராக பங்காரு அடிகளார் இருந்தார். மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கோயிலுக்கு வரும் பக்தர்களால் 'அம்மா' என்று அழைக்கப்பட்டார்.

பெண்கள் எந்த நாளிலும் கருவறைக்கு சென்று பூஜைகள் செய்யலாம் என்று ஆன்மிகத்தில் புதுமையை ஏற்படுத்தியவர் பங்காரு அடிகளார். அதோடு ஆன்மிகத்திலும் சீர்திருத்தங்களை செயல்படுத்தியுள்ளார். தென்னிந்தியா மட்டுமின்றி உலக அளவிலும் சக்தி வழிபாட்டு தலங்களை உருவாக்கியவர் பங்காரு அடிகளார். 15 க்கும் மேற்பட்ட நாடுகளில் பங்காரு அடிகளாரை பின்பற்றுபவர்கள் உள்ளனர் என்று கூறப்படுகிறது.

ஆன்மிக சேவையைப் பாராட்டி பங்காரு அடிகளாருக்கு 2019 ஆம் ஆண்டு பத்ம ஸ்ரீ விருது வழங்கி ஒன்றிய அரசு சிறப்பித்துள்ளது.

1970ஆம் ஆண்டு பங்காரு அடிகளார் சக்தி பீடத்தை நிறுவினார். ஆன்மிகத்துடன் சமுதாய தொண்டையும் மேற்கொண்டவர்.

1978ஆம் ஆண்டு முதன் முறையாக காஞ்சிபுரத்தில் ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்தைத் தொடக்கி வைத்தார். இன்றுவரை 2,500க்கும் மேற்பட்ட வார வழிபாட்டு மன்றங்களும், 25க்கும் மேற்பட்ட சக்தி பீடங்களும் மேல்மருவத்தூர் சித்தர் பீடத்துக்கு தொண்டாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

மதுராந்தகம் அடுத்த மேல்மருவத்தூர் கிராமத்தில் 1941ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3ஆம் தேதி கோபால நாயக்கர் மீனாம்பாள் தம்பதிக்கு மகனாக பிறந்தார். இவரின் இயற்பெயர் சுப்பிரமணி.

செங்கல்பட்டு பகுதியில் உள்ள அரசு ஆசிரியர் பயிற்சி மையத்தில் படித்து அச்சரப்பாக்கம் பகுதியில் ஆசிரியராக தனது பணியைத் தொடங்கினார்.

மதுராந்தகத்தில் பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆன்மீக பீடத்தின் நிறுவனர் பங்காரு அடிகளாரின் மறைவையொட்டி, இன்று மதுராந்தகம் கோட்டத்திற்கு உட்பட்ட பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவித்துள்ளார் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர்.

வரும் 22 ஆம் தேதி திருவண்ணாமலையில் வடக்கு மண்டல வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள்

பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் முதல்வர் சிறப்புரை ஆற்றுகிறார்!

மாவட்டக் கழகத்தினருக்கு தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருவண்ணாமலை, அக். 20-

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதியார் அவர்கள் தலைமையில் கடந்த 22.03.2023 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு கழகத்தில் ஒரு கோடி புதிய உறுப்பினர்களைச் சேர்த்தல், முழுமையாக பூத் கமிட்டி அமைத்தல் உள்ளிட்ட தீர்மானங் கள் நிறைவேற்றப்பட்டன. மேற்கண்ட தீர்மானங்களின் படி கழகத்தில் மொத்தம் இரண்டு கோடி உறுப்பினர்களை வெற்றிகரமாகச் சேர்த்து, ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் வாக்குச்சாவடி பொறுப்பா ளர்கள் (BLA 2) நியமிக்கப்பட்டு தலைமைக் கழகத்தால் முழுமையாகச் சரிபார்க்கப் பட்டுள்ளது.

கழகத் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி சரிபார்க்கப்பட்ட வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்களுக்கென "வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA 2) ஒரு நாள் பயிற்சிப் பாசறைக் கூட்டம்" நடத்திட முடிவெடுக்கப்பட்டு. கடந்த ஜூலை 26, ஆகஸ்ட் 17 மற்றும் செப்டம்பர் 24 ஆகிய நாட்களில் மேற்கு மண்டல வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டங்கள் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்ததைத் தொடர்ந்து வடக்கு மண்டலம் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட கிருஷ்ணகிரி, பர்கூர், ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட "வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்களுக்கு (BLA 2) பயிற்சி பாசறைக் கூட்டம்" வருகிற 22 ம் தேதி திருவண்ணாமலை ஒன்றியம், அருணாச்சலம் நகரில் அமைந்துள்ள "கலைஞர் திடலில்" கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதியார் அவர்கள் சிறப்புரை ஆற்ற உள்ளார்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடிகளுக்கான வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கு (BLA 2) நேரில் விவரங்கள் தெரிவித்து அனைத்து தகவல்களும் கொடுக்கப்பட்டுள்ளன. அதன்படி அனைத்து வாக்குச்சாவடி பொறுப்பாளர்களும் தவறாமல் 22 ம் தேதி காலை 5.00 மணிக்கு தங்கள் பயணத்தை புறப்பட திட்டமிட்டு காலை 8.00 மணிக்குள் திருவண்ணாமலை, அருணாச்சலம் நகரில் கூட்டம் நடைபெறும் "கலைஞர் திடலுக்கு" சென்றடைய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றிய, நகர, பேரூர்க் கழக செயலாளர்கள் முனைப்புடன் செயல்பட்டு அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடிகளுக்கான அனைத்து வாக்குச்சாவடி பொறுப்பாளர்களையும் (BLA 2) தவறாமல் அழைத்துக் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்ட பொறியாளர் அணி சார்பில் பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கான மாபெரும் பேச்சுப்போட்டி பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியத்தில் உள்ள அகரமேல் பகுதியில் பொறியியல் கல்லூரி வளாகத்தில் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் நடுகுத்தகை எம்.மோகன் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ போட்டியை துவக்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு கேடயம் சான்றிதழ் பரிசுத்தொகை வழங்கினார். அருகில் மாநில பொறியாளர் அணி தலைவர் துரை கி.சரவணன், மண்டல பொறுப்பாளர் இரா.நரேந்திரன் , தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், ஒன்றிய கழக செயலாளர் ப.ச.கமலேஷ், திருவேற்காடு நகரக் கழகச் செயலாளர் என்.இ.கே.மூர்த்தி, மாவட்ட பொது குழு உறுப்பினர் வி.குமார், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர்கள் வ.ஹரி, ஜெ.நிர்மல்ராஜ், ப.சக்திவேல்ராஜ், ஆ.இயேசுபாலன், கே.ஷர்மிளாதேவி, மாவட்ட கவுன்சிலர் ஏ.ஜி.ரவி, ஒன்றிய நிர்வாகிகள் அண்ணாமலை, ஏ.ஜனார்த்தன், எம்.இளையன், எஸ்.புககேந்தி, ஏ.ஆர்.பாஸ்கர், பிரபாகரன், வி.பி.பிரகாஷ், திருமலைராஜ், கேசவன், வி.சுமதி, டி.என்.பி.ஹாரிபாபு, உள்பட பலர் கலந்து கொண்டார்கள்.

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் ரூ.65 லட்சம் மதிப்பீட்டில் ரயில்வே காலனி பள்ளியில் கட்டப்பட்டுள்ள புதிய வகுப்பறைகளையும், ரங்கம் பாளையம் பகுதியில் சீர்மிகு திட்டத்தின் கீழ் ரூ.9.95 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அறிவியல் தொழில்நுட்ப (STEM) பூங்காவினையும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி திறந்து வைத்து பார்வையிட்டார். நிகழ்வில் ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் ஈ.வெ.கி.ச.இளங்கோவன், மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வே.செல்வராஜ், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்

ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில்

ரூ.15.84 கோடி மதிப்பீட்டில் புதிய வளர்ச்சி திட்டப்பணிகள்!

அமைச்சர் சு.முத்துசாமி தொடங்கி வைத்தார்!

ஈரோடு, அக். 20 -

ஈரோடு மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளில், ரூ.15.84 கோடி மதிப்பீட்டிலான புதிய வளர்ச்சி திட்டப்பணிகளையும் திறந்து வைத்து மற்றும் முடிவுற்ற திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா தலைமையில், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் ஈ.வெ.கி.ச.இளங்கோவன், மேயர் சு.நாகரத்தினம் சுப்பிரமணியம் முன்னிலையில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு ஆயத்தீரவைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார்.

அதுபோது அமைச்சர் சு.முத்துசாமி தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழக மக்களின் வாழ்வு மேம்பாட்டிற்காக எண்ணற்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் அடிப்படை தேவைகளை முழுமையாக நிறைவேற்றுகின்ற வகையில், தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராம ஊராட்சி பகுதிகளில் பொதுமக்கள் பயன்பெறுகின்ற வகையில் பல்வேறு திட்டப்பணிகளின் வளர்ச்சிக்காக அதிகப்படியான நிதியினை ஒதுக்கி தந்துள்ளார்கள்.

அதன்படி, இன்றைய தினம் ஈரோடு மாநகராட்சி, ரங்கம்பாளையம் பகுதியில், சீர்மிகு நகர திட்டத்தின் கீழ், ரூ.9.95 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அறிவியல் தொழில்நுட்ப (STEM) பூங்கா பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இப்பூங்கா புதிய தொழில்நுட்பத்துடன் டிஜிட்டல் கோளரங்கத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. இப்பூங்காவானது அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதத்தின் கோட்பாடுகளான செயல்முறையில் விளக்கம் அளிக்கக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு இன்றைய தொழில்நுட்பத்தின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு, இன்றைய கல்வி முறைக்கேற்ப நல்ல புரிதலை ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இங்கு இயக்கவியல், ஒலி, ஒளி, வேதியியல், உயிரியல் மற்றும் பண்பாட்டு அறிவியல் மற்றும் பல்வேறு தொழில்நுட்பங்களில் செயல்படும் மாதிரிகள் போன்ற அடிப்படை அறிவியல் கண்காட்சியுடன் நிறுவப்பட்டுள்ளது. அதே போன்று உள்விளையாட்டு அரங்கம், கண்காட்சிகள், கோளரங்கம், தொலை நோக்கியுடன் கூடிய கண் காணிப்பு குவிமாடம், விண்வெளி மண்டலம், சிற்றுண்டி சாலை, கழிப்பறைகள், பாதுகாப்பு அறை மற்றும் ஒலியத்துடன் கூடிய நுழைவு வாயில் என பல்வேறு சிறப்பம்சங்களுடன் இப்பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இதனை பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ், ரூ.61.00 இலட்சம் மதிப்பீட்டில் ரயில்வே காலனி பள்ளியில் கட்டுப்பட்டுள்ள புதிய வகுப்பறைகளும், பெரியவலசு மாநகராட்சி துவக்கப்பள்ளியில் ரூ.15.00 மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கழிப்பிடம், கருங்கல்பாளையம் செங்குட்டுவன் வீதியில், ரூ.47.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாய கூடம் மற்றும் ரூ.14.00 மதிப்பீட்டில் கட்டப்பட்ட கிராம நிர்வாக அலுவலகம், வைராபாளையம் பகுதியில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாய கூடம், மாணிக்கம்பாளையம் அம்பேத்கார் காலனியில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் சின்டெக்ஸ் அமைத்து பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கும் பணியினையும் மற்றும் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் ரூ.92.00 இலட்சம் மதிப்பீட்டில் ஜவுனி நகர் (மண்டலம் 1) ல் கட்டப்பட்டுள்ள இரவு நேர தங்கும் விடுதியும் என ரூ.12.84 கோடி மதிப்பீட்டிலான வளர்ச்சி திட்டப்பணிகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

அதே போன்று, மேலும், தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம் சார்பில், ஈரோடு மாநகராட்சி, ரங்கம்பாளையம் பகுதியில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டிலும், ராஜாஜிபுரம் பகுதியில் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டிலும், வில்லரசம்பட்டி, கருவில் பாறைவலசு பகுதியில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டிலும் என மாநகராட்சிக்குட்பட்ட 3 இடங்களில் புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணி, என ரூ.3.00 கோடி மதிப்பீட்டிலான புதிய வளர்ச்சி திட்டப்பணிகளை துவக்கி வைத்தும் என மொத்தம் ரூ.15.84 கோடி மதிப்பீட்டிலான புதிய

வளர்ச்சி திட்டப்பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மக்களின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தங்கள் அன்பையும், ஆதரவையும் அளிக்க வேண்டுமென தெரிவித்தார்.

முன்னதாக, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் , மகளிர் திட்டத்தின் சார்பில், குமலன்குட்டை பகுதியில் ரூ.41.00 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட பூமாலை வணிக வளாகத்தினை திறந்து வைத்தார் மற்றும் அம்மா பேட்டை, பெருந்துறை, பவானி, ஈரோடு மாநகராட்சி ஆகிய பகுதிகளைச் சார்ந்த 14 மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு ரூ.1.38 கோடி மதிப்பீட்டிலான வங்கி கடனுதவிகளையும் வழங்கினார்.

நிகழ்வுகளில் ஈரோடு துணை மேயர் வே.செல்வராஜ், மாநகராட்சி துணை ஆணையர் சுதா, மாநகர பொறியாளர் விஜயகுமார், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) மைக்கேல், துணை மாநகர பொறியாளர் சண்முகவடிவு, மாநகராட்சி மண்டல குழுத் தலைவர்கள் ப.க.பழனிச்சாமி சுப்பிரமணியம் ப.சசிகுமார் குறிஞ்சி என்.தண்டபாணி ஈரோடு வட்டாட்சியர் ஜெயகுமார், கழக நிர்வாகிகள் ஆ.செந்தில்குமார் ப.க.பழனிசாமி, டி.எஸ்.குமாரசாமி மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், மாமன்ற உறுப்பினர்கள் ஜெகநாதன், மோகன் கொல்லம்பாளையம் சக்திவேல், குணசேகரன், சாந்தி பாலாஜி. ரமேஷ் இலக்கிய அணி மாவட்ட அமைப்பாளர் இளையகோபால் ஈரோடு மாநகர நிர்வாகிகள் விமல் (எ) நந்தகுமார் ஜி. சண்முகம், கே.சந்திரசேகர், இமயம் சிவக்குமார் பகுதி செயலாளர்கள் வி.சி.நடராஜன் பொ.ராமச்சந்திரன் வில்லரசம்பட்டி முரு கேசன், க.லட்சுமண குமார், அக்னி சந்துரு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம், மாநகரத் துணை அமைப்பாளர் ஜாகிர் உசேன், கேபிள் செந்தில், வீரமணி சுள்ளான் எஸ்.ராஜேந்திரன், திலகவதி, சி.ஏ.கார்த்தி கே.டி. மகேஸ்வரன் உள்ளிட்ட உதவி செயற் பொறியாளர்கள், உதவி பொறியாளர்கள் , அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

காளையார் கோவிலில்

மாற்றுக் கட்சியினர் கழகத்தில் சேர்ந்தனர்!

அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் - ஆ.ராசா எம்.பி. முன்னிலை!

சிவகங்கை, அக். 20 -

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் நேற்று முன்தினம் கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாள் பொதுக்கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர் வே.ஆரோக்கியசாமி தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் காளையார் கோவில் ஒன்றிய பகுதியிலிருந்து அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்த துரை, பூமா, காந்தி, காயத்ரி, ராஜாங்கம், உட்பட 70 பேர்களும் ம.தி.மு.கவிலிருந்து எம். காளீஸ்வரன், குமார், செல்லத்துரை, சதாசிவம் உட்பட 25 பேர்களும் பா.ஜ.க.வில் இருந்து முனியாண்டி உட்பட 25 பேர்களும் மொத்தம் 100க்கும் மேற்பட்ட கட்சியினர் மாவட்டக் கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர். பெரிய கருப்பன் மாநில கழக துணை பொது செயலாளர் ஆ.ராசா எம்.பி. முன்னிலையில் தி.மு.க.வில் சேர்ந்தார்கள். அவர்களுக்கு காளையார்கோவில் ஒன்றிய செயலாளர் வே. ஆரோக்கியசாமி சால்வை அணிவித்து வரவேற்றார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் அ.கணேசன், மாவட்ட துணை செயலாளர்கள் த.சேங்கை மாறன், கே.எஸ்.எம்.மணிமுத்து மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் மற்றும் கிழக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் ஜான்சந்தியாகு வனிதா கண்ணதாசன் அ. சந்திரபோஸ் கிளைச் செயலாளர் ஆர்.வி.எஸ். அரங்கநாதன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா கொண்டாடுவதற்காக தி.மு.க. தொழிலாளர் அணியின் சென்னை மாவட்டங்களின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் பி.டி.சி. ஜி. செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அணியின் மாநில நிர்வாகிகள் முனைவர் ஆர். வரதன் வரவேற்றுப் பேசினார். பி.டி.சி. பாலு, ராஜா குப்புசாமி, கொல்லாபுரம் ராஜேந்திரன், மு. ராஜ காந்தன் மற்றும் சென்னை மாவட்டங்களில் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். எல். சம்பத்குமார் நன்றி கூறினார்.